<u>**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**</u>

**O.S. No. 178/2004**

Deposition of <u>**P.W.1**</u> witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 21.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : தமிழரசி Father's Name : சுப்ரமணி

துவக்க நேரம்: 04.18 P.M

<u>**4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**</u>

11. வழக்கு சொத்துக்கள் அனைத்தும் அருணாச்சல கவுண்டருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்பதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கின் அடிப்படையில் அருணாச்சல கவுண்டருக்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளோம், ஆனால் அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு சரியாக தெரியவில்லை.

12. ஏற்கனவே எனது கணவரால் இந்நீதிமன்றத்தால் தாக்கல் செய்யப்பட்டு நீக்கரவு செய்யப்பட்ட முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவரின் வயது என்ன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சுமார் 56, 57 வயது என குறிப்பிடப்பட்டிருக்கலாம். வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களின் படி மேற்படி ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட பொழுது 7-ஆம் பிரதிவாதி மேஜர் என்றால் மேற்கண்ட

ஆவணங்களில் 7-ஆம் பிரதிவாதியின் வயது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை அதுபற்றி என்னால் கூற இயலாது. அதேபோல் மேற்கண்ட ஆவணங்களில் 7-ஆம் பிரதிவாதியானவர் மைனர் என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

13. வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட பொழுது 7-ஆம் பிரதிவாதி மேஜர் என்றாலும், அதன் பின்னிட்ட ஆவணமான வா.சா.ஆ.4-ல் அவரது வயது 18 என குறிப்பிடப்பட்டுள்ளது, 1 முதல் 3 வரையிலான ஆவணங்களுக்கு முரணானது என்றாலும், வா.சா.ஆ.4 ஆனது வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல.

14. என்னிடம் காட்டப்படும் ஆவணமான வா.சா.ஆ.21 ஆனது எந்த மருத்துவ பதிவேடுகளை பரிசீலித்து கொடுக்கப்பட்டது என்று குறிப்பு இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை, ஆனால் மேற்கண்ட ஆவணம் ஆத்தூர் அரசு மருத்துவமனை வழங்கிய ஆவணமாகும். வா.சா.ஆ.4-ன் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4, 21 ஆவணங்களின் அசல் ஒப்படைக்கப்படாததால் மேற்கண்ட ஆவணங்கள் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4-ல் குறிப்பிடப்பட்டுள்ள அருணாச்சல கவுண்டர் என்பவர் 1 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4-ல் உள்ள கையொப்பம் அருணாச்சல கவுண்டரின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல.

15. வா.சா.ஆ.5 ஆவணத்தில் முத்துக்குமாரசாமி மகன் அருணாச்சல கவுண்டரின் மனைவி பார்வதியம்மாள் என்று குறிப்பாக இல்லை என்றால் சரிதான், ஆனால் அருணாச்சல கவுண்டரின் மனைவி பார்வதியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

Typed by Tmt.L.Kalaiselvi- O.S. No.178/2004 , Dt. 21.11.2025.

மேற்கண்ட ஆவணத்தில் சொத்து விவரத்தில் நான்கெல்லையில் முத்துக்குமாரசாமி கவுண்டர், மாரியாயி அம்மாள் மனைக்கு வடக்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் ஒப்பந்த தேதி என்ற காலத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் சீனன் (எ) அருணாச்சல கவுண்டர் என்று குறிப்பாக இல்லை என்றால் சீனன் என்பது அவரை ஊரில் உள்ளவர்கள் அழைக்கும் பெயர், ஆனால் அவரது பெயர் அருணாச்சலம்தான்.

16. வா.சா.ஆ.6 ஆனது வழக்கு சொத்திற்கு தொடர்பில்லாத ஆவணம் என்றாலும், அந்த ஆவணம் புல எண். 139/4 என்ற இடத்துடன் தொடர்புடையது என்றாலும் சரிதான், புல எண். 139/4-ல் உள்ள சொத்து பார்வதியம்மாளுக்கு அவரது தகப்பனார் கொடுத்த சொத்தாகும். வா.சா.ஆ.7 ஆவணமான தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யக்கோரி இவ்வழக்கில் பரிகாரம் கேட்கப்படவில்லை என்றால் சரியல்ல, அனைத்திற்கும் சேர்த்துதான் மொத்தமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

17. வா.சா.ஆ.8 ஆவணமானது தமிழக அரசாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினாலோ வழங்கப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வி நிறுவனமே இல்லை என்றாலும், அந்த ஆவணம் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சின்னம் போலியானது என்றால் சரியல்ல.

18. வா.சா.ஆ.9 ஆவணத்தில் 7-ஆம் பிரதிவாதி பார்வதியம்மாளின் மகன் பாலசுப்ரமணியன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அவருக்கு 10 வயது ஆகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் உள்ள

வழக்கில் எதிரியான அருணாச்சல கவுண்டர் என்பவர் பார்வதியம்மான் தனது மனைவி இல்லை என்றும், பாலசுப்ரமணியம் தனக்கு மகன் இல்லை என்றும் குறிப்பிட்டு வாதம் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கானது அவர்களுக்குள் ஏற்பட்ட குற்ற வழக்காகும்.

19. வா.சா.ஆ.12 ஆவணமான அருணாச்சல கவுண்டரின் இறப்புச் சான்றிதழ் இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 9 புகைப்படங்கள் யாரால், எப்பொழுது எடுக்கப்பட்டது என்ற விவரமோ, அதற்கான ரசீதுகளோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் மேற்கண்ட புகைப்படங்கள் அருணாச்சல கவுண்டர் இறந்த பிறகு, கரும காரியத்திற்கு முன்பு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகும்.

20. வா.சா.ஆ.22-ல் அருணாச்சல கவுண்டரின் சாட்சி கையொப்பம் இல்லை என்றால் மேற்படி ஆவணம் கடந்த 1977-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அருணாச்சல கவுண்டர் கடந்த 1975-ஆம் ஆண்டே இறந்துவிட்டார்.

4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 05.02 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/- D. JansiRani,
Additional District Munsif, Attur

Typed by Tmt.L.Kalaiselvi- O.S. No.178/2004 , Dt. 21.11.2025.